மோடியின் 10 அம்சத் திட்டம்!

இரண்டாம் உலகப்போரை முடிவுக்குக் கொண்டு வந்த அமெரிக்காவின் அணுகுண்டு தாக்குதலை மறந்துவிட முடியாது. ஜி7 உறுப்பினர்களையும் ஐரோப்பிய கூட்டமைப்புத் தலைவர்களையும் அணுகுண்டு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கான நினைவிடத்துக்கு அழைத்துச் சென்றதன் மூலம் அணு ஆயுதப் பேரழிவின் விளைவுகளை உலகுக்கு நினைவுபடுத்த முற்பட்டிருக்கிறார் ஜப்பான் பிரதமர். அணு ஆயுதக் குறைப்பு குறித்த ஹிரோஷிமா அறிக்கை, நடந்து முடிந்த ஜி7 மாநாட்டின் முக்கியமான பதிவு.

அணுகுண்டு வீச்சால் கடுமையாக பாதிக்கப்பட்ட ஹிரோஷிமா நகரத்துக்கு விஜயம் செய்திருக்கும் இரண்டாவது அமெரிக்க அதிபர் ஜோ பைடன். ஜி7 மாநாட்டின் முக்கியத்துவத்தை அதிபர் பைடனின் வரவும், உக்ரைன் அதிபர் ஸெலென்ஸ்கியின் எதிர்பாராத பங்கேற்பும் அதிகரித்தன.

அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி, ஜெர்மனி, கனடா, ஜப்பான் ஆகிய 7 நாடுகளை உள்ளடக்கிய ஜி7 அமைப்பு சர்வதேச அளவில் முக்கியமானது. ஜப்பானை தவிர ஏனைய நாடுகள் ஐரோப்பிய – அமெரிக்காவை சேர்ந்தவை. 2008–இல் ஜார்ஜியாவையும், 2014–இல் கிரீமியாவையும் தன்னுடன் இணைத்துக் கொண்டதைத் தொடர்ந்து அந்த அமைப்பிலிருந்து ரஷியா அகற்றப்பட்டது.

உலகின் முக்கியமான பொருளாதாரங்களான சீனாவும் இந்தியாவும் இணைக்கப்படாதது ஜி7 அமைப்பின் பலவீனம். ஜி7 அமைப்பு தன்னுடைய முக்கியத்துவத்தை அதிகரிக்க வேண்டுமானால் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

இப்போது உலகின் மொத்த சொத்து மதிப்பில் பாதிக்கு மேல் உள்ளடக்கிய அதன் உறுப்பு நாடுகள், உலக ஜிடிபியில் மூன்றில் ஒரு பங்கும், மக்கள்தொகையில் பத்தில் ஒரு பங்கும்தான் வகிக்கின்றன. ஹிரோஷிமாவில் நடந்த ஜி7 மாநாட்டுக்கு இந்தியா, பிரேஸில், இந்தோனேசியா, வியத்நாம் ஆகிய நாடுகளுக்கு

அழைப்பு விடுத்ததன் மூலம் ஜப்பான் பிரதமர் கிஷிடா ஏனைய மேலை நாடுகளிலிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்ட நினைக் கிறார் என்று தோன்றுகிறது.

ஹிரோஷிமாவில் நடந்த ஜப்பான் தலைமையிலான ஜி7 மாநாட்டுக்கு இரண்டு குறிக்கோள்கள் இருந்தன. சட்டத்தின் அடிப் படையிலான சர்வதேச ஒழுங்கை நிலைநாட்டுவதும், தெற்கு உலகு என்று அழைக்கப்படும் வளர்ச்சியடையும் நாடுகளுடன் நெருக்கம் ஏற்படுத்திக் கொள்வதும்தான் அவை. சர்வதேச ஒழுங்கு என்பது உக்ரைன் போர் குறித்தது மட்டுமல்லாமல் தைவான், தென் சீனக்கடல் பிராந்தியம், பசிபிக் கடல் பகுதிகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியது.

உக்ரைன் பிரச்னையில் ஜி7 தலைவர்கள் கடுமையான வார்த்தைகளில் ரஷியாவின் ஆக்கிரமிப்பைக் கண்டித்தனர். நிபந் தனை இல்லாமல் தனது துருப்புகளை உக்ரைனிலிருந்து ரஷியா விலக்கிக்கொள்ள சீனா வற்புறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். அதைவிடக் கடுமையாக இருந்தது சீனா குறித்த ஜி7 அறிக்கை. திபெத், ஷின்ஜியாங், ஹாங்காங் பகுதிகளில் காணப் படும் மனித உரிமை மீறல் குறித்த ஜி7 கண்டனம் சீனாவை கோபப் படுத்தக்கூடும்.

ஜி7 நாடுகளின் தலைவர்கள், ஒவ்வொரு மாநாட்டின்போதும் வளர்ச்சி அடையும் தெற்கு உலக நாடுகளுக்கு உதவிகள் செய்வ தாக வாக்களிப்பதும், மாநாடு முடிந்து திரும்பியதும் அதை மறந்து விடுவதும் புதிதல்ல. மேலை நாட்டு அரசுகளும், அவற்றின் வங்கி களும் ஏழை நாடுகள் கடன் தவணை செலுத்தத் தவறினால் அழுத் தம் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றன. உலகின் ஏழு பணக்கார நாடுகள் இணைந்த அமைப்பு ஏழை நாடுகள், வளர்ச்சி அடையும் நாடுகளின் பிரச்னைகளுக்கு முக்கியத்துவம் தருவ தில்லை என்பது புதிதொன்றுமல்ல.

நடந்து முடிந்த ஜி7 மாநாட்டில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொண்டது புதியதொரு திருப்பத்தை ஏற்படுத்தியது. பிரத மர் மோடியும், உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கியும் முதல் முறையாக நேருக்கு நேர் சந்தித்து உக்ரைன் போரை நிறுத்து வது குறித்து விவாதித்தது ஹிரோஷிமா மாநாட்டின் மிக முக்கிய மான அம்சம்.

ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து ரஷியா வெளியேறி உக்ரைனில் அமைதியை மீண்டும் நிலைநாட்ட இந்தியாவின் உதவியை அதிபர் ஸெலென்ஸ்கி நாடியதற்கு காரணம் இருக்கிறது. அதிபர் விளாதிமீர் புதினுக்கு பிரதமர் மோடி மூலமாக சமாதான தூது விடுக்க அதிபர் ஸெலென்ஸ்கி முனைந்திருக்கிறார் என்று கருதலாம்.

ரஷியாவுக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும்கூட ஹிரோஷிமா மாநாட்டில் இந்தியா கலந்துகொண்டதையும் அதிபர் ஸெலென்ஸ்கியை சந்தித்துப் பேசியதையும் ரஷியா தவறாகக் கருதவில்லை என்பதிலிருந்து இந்தியாவுக்கும், பிரதமர் மோடிக்கும் கிடைத்திருக்கும் முக்கியத்துவம் வெளிப்படுகிறது.

ஹிரோஷிமாவில் மனித இனத்தின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த பிரதமர் மோடி முன்வைத்த 10 அம்சத் திட்டம் மாநாட்டில் கலந்துகொண்ட நாடுகளின் கரகோஷ வரவேற்பைப் பெற்றது. உணவுப் பொருள்கள் வீணாவதைத் தடுப்பது, உலகளாவிய நிலையில் உர விநியோகத்தில் அரசியலைத் தவிர்ப்பது, சிறுதானியங்களை ஊக்குவிப்பது, ஒருங்கிணைந்த மருத்துவப் பாதுகாப்பு, வளர்ச்சி அடையும் நாடுகளின் தேவை சார்ந்த வளர்ச்சித் திட்டங்கள் உள்ளிட்டவை பிரதமர் மோடியின் 10 அம்சத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்.

ஜி7 மாநாடு, குவாட் மாநாடு ஆகியவற்றைத் தொடர்ந்து ஜூலை மாதம் தில்லியில் ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடும், ஆகஸ்ட் மாதம் தென்னாப்பிரிக்காவில் பிரிக்ஸ் மாநாடும் நடக்க இருக்கின்றன. செப்டம்பர் மாதம் ஜி20 உச்சி மாநாடு இந்தியாவில் நடக்க இருக்கிறது. கூடினோம் கலைந்தோம் என்றில்லாமல் உலக அமைதிக்கும் வளர்ச்சிக்கும் இவை பங்களிப்பு நல்கும் என்று எதிர் பார்ப்போம்!